
## திராவிடத்தால் வாழ்கிறோம்

914

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

---

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

15

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுப் பூர்வமாக விவரிக்கும் தொடர்!

# தி.மு.க.வுக்குப் போராட்டம் தவிர, வேறு வழியில்லை!

சமூக நீதியின் அடிப்படையில், அதுவரை வழங்கப்பட்ட 'வகுப்புவாரி உரிமையைப் பொருளாதார அடிப்படையிலான 'எக்னாமிக் ஜி.ஒ'வாக மாற்றிய இட ஒதுக்கீட்டு ஆணைக்கு எதிராக, தமிழ்நாட்டில் அனைத்து அரசியல் கட்சிகளும் ஓரணியில் திரண்டன. திராவிட முன்னேற்றக் கழகத்துடன் திராவிடர் கழகம், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், இந்திய கம்யூனிஸ்ட் உள்பட அனைத்து அரசியல் கட்சிகளும் இணைந்து கடுமையாக எதிர்ப்பைத் தெரிவித்தன.

காங்கிரஸ் தலைவர்களும் இந்தப் போராட்டத்தில் இணைந்து கொண்டனர். சிறிய கட்சிகளும், சமூக நீதி அமைப்புகளும், சாதி அமைப்புகளும், அரசு அலுவலர் சங்கங்களும் வருமான வரம்பு அரசாணையை ரத்து செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி, குரல் கொடுக்கத் தொடங்கினர். அனைத்து குரல்களையும் ஒருங்கிணைத்தது கழகம்.

'புதருக்குள் பதுங்கியிருக்கும் நாகம் வெளிவருகிறது' என எம்.ஜி.ஆர் அவர்களின் அரசாணைக்குப் பின்னிருந்த நோக்கத்தை அம்பலப்படுத்தினார் கலைஞர். முதலில், பிற்படுத்தப்பட்டவர்களின் இட ஒதுக்கீட்டில் ஏழைகளுக்கு மட்டும் என்பார்கள், பின்னர் தாழ்த்தப்பட்டவர்கள் ஒதுக்கீட்டில் கைவைப்பார்கள் என பதறினார் கலைஞர். பக்கம் பக்கமாக 'முரசொலி'யில் எழுதி உடன்பிறப்புகளுக்கு அறைகூவல் விடுத்தார்.

### பொதுக்குழு போர்ப்பரணி

ஜூலை 14-ஆம் தேதி கூடிய கழகத்தின் பொதுக்குழு, போராட்ட வடிவங்களை, போராட்டத் திட்டங்களை முடிவு செய்தது. தொடர்ச்சியாக, தமிழ்நாடு முழுவதும் ஜூலை 22-ஆம் தேதி வகுப்புரிமைப் பாது காப்பு நாள் விளக்கக் கூட்டங்களை நடத்தி மக்களை அணிதிரட்டியது. கலைஞர் விருதுநகரிலும், கழக முன்னோடிகள் பலரும் தமிழ்நாடு எங்கும் தொடர் பயணங்களைத் தொடங்கினர். திராவிடர் கழகத்தின் சார்பில், ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அனைத்துக் கட்சியினரும் கலந்துகொண்ட மாநாட்டினை நடத்தி, எதிர்ப்பினைப் பதிவு செய்தார்.

நெய்வேலியில் நடைபெற்ற வகுப்புரிமைக் காப்புப் பொதுக்கூட்டத்தில் கலைஞரும், ஆசிரியர் கி.வீரமணியும் மேடையேறுகின்றனர். மேடையில் தலைவரைப் பார்த்த ஆசிரியர், "ஏன் சோர்வாக இருக்கிறீர்கள்?" என கேள்வி எழுப்புகிறார். அதற்கு தலைவர் கலைஞர் அவருக்கு பதில் சொன்னதுடன், அந்தக் கேள்வியையும் பதிலையும் கூடியிருந்த உடன்பிறப்புகளுக்கும் சொல்கிறார் கலைஞர்.

''விபத்திலே தாய் சிக்குண்டு உயிர் பிழைப்பாளா, மாட்டாளா என்ற சந்தேகத்திற்கு இடையே மருத்துவமனையிலே மரணப் படுக்கையில் கிடக்கும் போது ஒரு மகனின் மனம் என்ன பாடுபடுமோ, அத்தகைய வேதனையைக் கடந்த ஒரு மாத காலத்திற்கும் மேலாக நான் பட்டுக் கொண்டிருக்கிறேன். அந்தக் காரணத்தினால் சோர்வாக இருக்கிறேன். ஆட்சி பறிக்கப்பட்ட போது சோர்வாக இல்லை. கி.வீரமணி போன்ற திராவிடர் கழக நண்பர்கள், இங்கே வீற்றிருக்கின்ற தி.மு.கழகத்தின் முன்னணித் தோழர்கள், செயல்வீரர்கள், தளபதிகள், ஐந்நூறுக்கும் மேற்பட்டவர்கள் மிசா கைதிகளாக ஓராண்டு காலம் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருந்த போது கூட நான் சோர்வடைந்து விடவில்லை. என்னுடைய வீடு சோதனைக்கு ஆளாக்கப் பட்டது. என் மீது பல்வேறு விதமான வழக்குகள் போடப்பட்டன. அந்த வழக்குகள் இன்னும் முடிவடையக்கூட இல்லை. அதற்காககூட நான் சோர்வடையவில்லை. பதவி வகித்த நேரத்தில் எல்லாம் பக்கத்தில் இருந்த பலர் பதவி சிம்மாசனம் இல்லை என்றதும், எனக்குப் பக்கத்துணையாக இல்லாதது மாத்திரமல்ல, என்னுடைய முதுகில் குத்துகிறவர்களாக மாறினார்கள். அப்போதும் நான் சோர்வடையவில்லை.

ஆனால், இந்த ஒரு மாத காலமாகச் சோர்வுற்றிருக்கிறேன் என்றால், பெரியார் அவர்களும், அண்ணா அவர்களும் அவர்களுக்கெல்லாம்கூட வழிகாட்டிகளாக அமைந்த திராவிட இயக்கத் தலைவர்களும் எந்த ஓர் உரிமையை இந்த இயக்கத்தின் அடித்தளமாக வைத்து உருவாக்கினார்களோ, அந்த உரிமை ஒரு மாத காலத்திற்கு முன்பு என்னுடைய நண்பர், தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் பிறப்பித்த உத்தரவின் காரணமாக உயிர் இழந்து போய்விடுமோ, அது குற்றுயிரும் குலையுயிருமாக துடித்துக் கொண்டிருக்கிறதே என்பதை எண்ணித்தான், அரசியல் ரீதியில் அல்ல, இந்த ஆட்சியை எப்படியும் எதிர்க்க ஓர் ஆயுதம் கிடைத்துவிட்டது என்ற அளவில் அல்ல, எதிர்கால தமிழ்ச் சமுதாயம், பிற்படுத்தப்பட்ட சமுதாயம் மீண்டும் 1916-ஆம் ஆண்டு நிலைக்குப் பயங்கரமான இருள் குகைக்குப் போய் முடங்கிக் கிடக்க வேண்டும் என்பதை எண்ணித்தான் நான் சோர்வாக இருந்தேன்" என்றார்.




> **போராட்டங்களின் ஒரு வடிவமாக 1979 அரசாணை எண்-1156 ஐ எரித்து, அதன் சாம்பலை, தலைமைச் செயலகத்துக்கு அனுப்பி வைக்கும் போராட்டத்தை அறிவித்தார் கலைஞர்.**

### எம்.ஜி.ஆர். அளித்த புதிய அதிர்ச்சி

கடலூரில் பெரியார் நூற்றாண்டு விழாவில் பேசிய எம்.ஜி.ஆர், 'கலைஞர் அமைத்த சட்டநாதன் ஆணையத்தின் பரிந்துரைகளின் படியே பொருளாதார இட ஒதுக்கீட்டைச் செயல்படுத்துவதாகக்' கூறினார். அவர் சொன்னதில் உண்மை இருந்தாலும், சட்டநாதன் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதில் கலைஞர் கொண்டிருந்த கொள்கைத் தெளிவு எம்.ஜி.ஆர் அவர்களிடம் இல்லை என்பதையே 1979-ஆம் ஆண்டு அரசாணை-1156 தெளிவு படுத்தியது.

முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது சட்டநாதன் தலைமையில் முதலாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தை அமைத்து, இடஒதுக்கீடு அளிப்பது குறித்த பரிந்துரைகளைப் பெற்றிருந்தார்.

தகுதியானவர்களை அடையாளம் காண்பதை வரையறுக்கும்படி அந்த ஆணையத்திடம் கேட்கவில்லை என்றாலும், தனது வரம்புகளுக்கு அப்பாற்பட்டு, சட்டநாதன் ஆணையம் சில பரிந்துரைகளை வழங்கி இருந்தது. அதில் ஒரு பரிந்துரைதான் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டில் வருமான வரம்பு விதிக்கலாம் என்பது. சட்டநாதன் ஆணையம் அளித்த அனைத்து பரிந்துரைகளையும் கலைஞர் தலைமையிலான அரசு அப்படியே ஏற்கவில்லை. எவற்றை அமல்படுத்தினால், ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப் பட்ட மக்கள் உயர்வடைவார்களோ அவற்றை மட்டுமே நடைமுறைப்படுத்தினார் கலைஞர்.

ஆனால், 1979 ஆம் ஆண்டில் பிற்படுத்தப் பட்டோர் இடஒதுக்கீட்டில் எம்.ஜி.ஆர் எடுத்திருந்த நிலைப்பாடு அதிர்ச்சி அளித்தாலும், அனைத்து எதிர்ப்புகளையும் மீறி, தனது நிலைப்பாட்டினை நியாயப்படுத்தவும் செய்தார்.

தனக்கு அளிக்கப்பட்ட தவறான ஆலோசனை என அவர் பின்வாங்கவில்லை. தவிர, "அடுத்த ஆண்டு முதல் உயர்சாதியில் உள்ள ஏழைகளுக்கு, பொதுப்போட்டி இடங்களில் இருந்து தனி இட ஒதுக்கீடு அமல்படுத்தப்படும். நண்பர் கருணாநிதி இதற்காகவும் ஒரு போராட்டம் தொடங்க இப்போதே தயாராகலாம். அவருக்கு போராட்டம் தவிர, வேறு வழியில்லை" என்று பெரும் தீயையும் பற்றவைத்தார்.

திராவிட இயக்கத்தின் அடித்தளத்தைத் தகர்க்கும் அந்த அரசாணைக்கு எதிராக, போர்க்குரலைத் தீவிரமாக்கியது கழகம். போராட்டங்களின் ஒரு வடிவமாக 1979 அரசாணை எண்-1156 ஐ எரித்து, அதன் சாம்பலை, தலைமைச் செயலகத்துக்கு அனுப்பி வைக்கும் போராட்டத்தை அறிவித்தார் கலைஞர்.

1979 நவம்பர் 26ஆம் தேதி மாநிலம் முழுவதும் அரசாணையை எரித்து ஆர்ப்பாட்டம் செய்தது கழகம். ''அந்தச் சாம்பல் பொட்டலங்களை, தலைமைச் செயலகத்தின் குரோட்டன்ஸ்களுக்கு உரமாக்குவோம்" என்றார் அன்றைக்கு அமைச்சரவையின் முக்கிய பொறுப்பில் இருந்த நாவலர்.

"வகுப்புரிமையில் வருமான வரம்பு வாபஸ் ஆகும்வரை திராவிட இயக்கம் போர்க்களத்தி லிருந்து திரும்பாது" என்று உறுதியளித்தார் முத்தமிழறிஞர் கலைஞர். "உடன்பிறப்பே... தன்மான இயக்க லட்சியம் காத்திட, நானே முதற் களப்பலியாக இருப்பேன் என உனக்குச் சொல்லவும் வேண்டுமோ..." என்ற அவரது அழைப்பு கழகத்தினர் உள்ளத்தில் எரிமலையாக வெடித்தது.

...தொடரும்

---

### கும்பல் வன்முறையில் அமைதிகாக்கும் ஒன்றிய அரசு!

'வாட்ஸ் அப்' வதந்தி, கும்பல் வன்முறைகளால் பெயர்பெற்ற சங் பரிவார் அமைப்பான 'பஜ்ரங் தள்', சமீபத்தில் சத்தீஸ்கர் மாநிலத்தில் மீண்டும் ஒரு தாக்குதலை நடத்தியுள்ளது. அங்கு பணிபுரியும் கேரளாவைச் சேர்ந்த இரண்டு கன்னியாஸ்திரிகள், ப்ரீத்தி மேரி மற்றும் வந்தனா ஃபிரான்சிஸ் ஆகியோர், சத்தீஸ்கர் மாநிலத்தின் நாராயண்பூர் பகுதியில் இருந்து, சமையல் பணிக்காக, 3 பெண்களை ரயிலில் ஆக்ராவுக்கு அழைத்துச் சென்றுள்ளனர். இதையறிந்து, பஜ்ரங் தள் அமைப்பினர், கன்னியாஸ்திரிகள் அப்பெண்களை கடத்திச் சென்று மதமாற்றம் செய்வதாக, 'வாட்ஸ் அப்' மூலம் வதந்தி பரப்பி, ஆட்களைத் திரட்டி கன்னியாஸ்திரிகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். அதன் பின்னர், கன்னியாஸ்திரிகள் மீது கட்டாய மதமாற்றம், ஆள் கடத்தல் வழக்குகளின் கீழ் புகார் அளிக்கப்பட்டு, அம்மாநில அரசு கைது செய்து சிறையில் அடைத்துள்ளது.

'பஜ்ரங் தள்' அமைப்பின் கும்பல் வன்முறைக்கு எதிராக, நாடாளுமன்ற வளாகத்தில் கேரள இடதுசாரி நாடாளுமன்ற உறுப்பினர்களும், எதிர்க்கட்சி எம்.பி.க்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நிலையில், 'அந்தத் தாக்குதலுக்கும், கைதுக்கும்' எதிராக கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் தனது எக்ஸ் தள பக்கத்தில் கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார். அந்தப் பதிவில் "கன்னி யாஸ்திரிகள் இருவர் சத்தீஸ்கர் மாநிலத்தில் பஜ்ரங் தள் அமைப்பின் பொய்க் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் துன்புறுத்தப்பட்டு, கைது செய்யப்பட்டிருப்பது மிகுந்த கவலையளிக்கிறது.

இத்தகைய கும்பல் வன்முறையும், அரசு அதுகுறித்து அமைதி காப்பதும் மத பயங்கரவாதத்தின் ஆபத்தான போக்கை வெளிப்படுத்து கிறது. இந்தியாவின் சிறுபான்மையின மக்கள் மாண்போடும் சம உரிமைகளோடும் நடத்தப்பட வேண்டும். மாறாக, அவர்களை அச்சுறுத்தக்கூடாது" எனக் குறிப்பிட்டுள்ளார். அம்மாநில அரசு மட்டுமல்ல; ஒன்றியத்தை ஆளும் அரசும் கும்பல் வன்முறையில் அமைதியே காக்கிறது. அதற்கு எதிராகவும்தான் ஒலிக்கிறது, கழகத் தலைவரின் குரல்.

---

### ஃப்ளாஷ்பேக்



ஹரிஹரன் ஜெகதீசன்



### தலைவர் மீதான ஈர்ப்பும் சந்திப்பும்!

14.04.2015 அன்று சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை சந்திக்கும் பெரும் வாய்ப்பைப் பெற்றேன். விவரம் தெரிந்த நாள் முதல், கழகத் தொண்டனாகவே இருக்கும் எனக்கு, தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களை சந்திக்க வேண்டும் என்கிற ஆசை அன்று நிறைவேறியது. தலைவரை சந்திக்க யாராவது பரிந்துரை செய்ய வேண்டும் என நினைத்திருந்தேன். ஆனால், தலைவர் வீட்டில் காத்திருப்பு அறையில் இருந்த தொண்டனாக, சாதாரணமாகவே சந்திக்க வாய்ப்பு கிடைத்தது. உள்ளே அனுப்பும்போது 'தலைவர் காலில் விழக்கூடாது' என கண்டிப்பான முறையில், அறிவுறுத்த மட்டுமே செய்தனர். இவையெல்லாம் தலைவரைக் கண்டு பிரமிக்கவும், தலைவர் மீதான ஈர்ப்பு இன்றும் பன்மடங்கு பெருகவும் காரணம்.

**- ஹரிஹரன் ஜெகதீசன்,**
**தி.மு.க. சட்டத்துறை உறுப்பினர், மதுரை தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

---

### நம் வரலாறு

### தமிழர்களின் பெருமை!

1957-ஆம் ஆண்டு தி.மு.கழக தேர்தல் பிரச்சார சிறப்பு மாநாட்டில், பேரறிஞர் அண்ணா உரையாற்றினார். "தி.மு.கழகம் தேர்தலில் ஈடுபடுவது, தமிழ்நாட்டிற்குப் புதிய அந்தஸ்தைத் தேடித் தருவதற்காகத்தான். குட்டக்குட்ட குனிபவர்கள் தமிழர்கள் என்றிருக்கும் பழியைத் துடைத்து, மறக்குடி பிறந்த மாவீரர்கள் தமிழர்கள் என்ற பெருமையை நிலைநாட்டிக் கொள்ளத் தமிழர்களுக்கு அரியதோர் வாய்ப்பு. மக்களின் தீர்ப்பு தமிழகத்திற்கு நல்ல எதிர்காலத்தை, அந்தஸ்தைத் தேடித்தரும் என்று நான் நம்புகிறேன்"என்றார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131